# 2020

## වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## ANNUAL PERFORMANCE REPORT



දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் - இலங்கை

**Inland Revenue Department - Sri Lanka**

# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# வருடாந்த செயலாற்றுகைஅறிக்கை
# 2020

செலவினத் தலைப்பு இலக்கம் 246

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**
**சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02**

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| **அட்டவணைகளின் பட்டியல்** | | iii |
| **உருக்களின் பட்டியல்** | | iv |
| **சுருக்கப்பதம்** | | v |
| **அத்தியாயம் 01** | **நிறுவன விவரம்** | |
| 1.1 | அறிமுகம் | 3 |
| 1.2 | நோக்குசெயல்நோக்கு மற்றும் உபாய இலக்குகள் , | 4 |
| 1.3 | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் | 5 |
| 1.4 | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் | 5 |
| 1.5 | நிறுவன ஒழுங்கமைப்பு வரைபடம் | 6 |
| **அத்தியாயம் 02** | **முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்** | |
| 2.1 | இல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிறப்பு 2020 அடைவுகள் | 9 |
| 2.2 | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சவால்களும் எதிர்கால இலக்குகளும் | 23 |
| **அத்தியாயம் 03** | **இவ் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை** | |
| 3.1 | நிதிச் செயற்பாட்டு கூற்று | 29 |
| 3.2 | நிதி நிலவரக் கூற்று | 31 |
| 3.3 | காசுப் பாய்ச்சல் கூற்று | 32 |
| 3.4 | கணக்குகளுக்கான குறிப்புகள் | 34 |
| 3.5 | வருமான சேகரிப்பின் செயலாற்றுகை | 52 |
| 3.6 | ஒதுக்கீட்டு பாவ**னை**யின் செயலாற்றுகை | 53 |
| 3.7 | நி. 208 .ஒ.இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்திணைக்களத்தின் ஒரு முகவராக இத் / திணைக்களத்தின் செலவினத்திற்கு மானிய ஒதுக்கீடுகள் | 53 |
| 3.8 | நிதியற்ற சொத்துக்களின் அறிக்கையிடலின் செயலாற்றுகை | 54 |
| 3.9 | கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 55 |
| **அத்தியாயம் 04** | **செயலாற்றுகை குறிகாட்டிகள்** | |
| 4.1 | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் | 59 |
| **அத்தியாயம் 05** | **நிலைபேறான மேம்பாட்டு அடைவுகள்** (SDG) | |
| 5.1 | நிலைபேறான மேம்பாட்டு இலக்குகளின் அடைவுக்கான செயலாற்றுகை | 63 |
| **அத்தியாயம் 06** | **மனித வள விவரம்** | |
| 6.1 | பதவியணி முகாமைத்துவம் | 71 |
| 6.2 | மனித வள மேம்பாடு | 71 |
| **அத்தியாயம் 07** | **இணக்க அறிக்கை** | |
| 7.1 | **இணக்க அறிக்கை** | 79 |
| **இணைப்பு** | | |

# அட்டவணைகளின் பட்டியல்


அட்டவணை2.1 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் வரிகள்


அட்டவணை2.1 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் வரிகள்


அட்டவணை2.2 2020ம் ஆண்டு வரி சேகரிக்ப்பட்ட ஆனால் நீக்கப்பட்ட மற்றும் இரத்துசெய்யப்பட்ட வரிகள்

அட்டவணை2.3 மொத்த வருமான சேகரிப்பு - 2020

அட்டவணை2.4 2019 மற்றும் 2020ம் ஆண்டுகளுக்கிடையேயான வருமான ஒப்பீடு

அட்டவணை 2.5 **அரச வருமானம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பு (தற்போதைய விலைகளில்)**

அட்டவணை2.6 **வரி வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் - 2020**

அட்டவணை 2.7 **31.12.2020 ஆம் திகதியில் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட வரி செலுத்துனர்களின் எண்ணிக்கை**

அட்டவணை2.8 வருமான சேகரிப்பு, மொத்த செலவினம் மற்றும் சேகரிப்பு செலவினம்

அட்டவணை2.9 2020 ஆம் ஆண்டில் பொதுமக்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

அட்டவணை2.10 2015/2016 - 2019/2020 வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு

அட்டவணை2.11 பெறுமதி சேர் வரி மீதான விபரத்திரட்டு இணக்கப்பாடு

அட்டவணை2.12 வரி அடுக்குகள் மற்றும் வீதங்கள்

அட்டவணை2.13 முடிவுறுத்தல் நன்மைகளிற்கான வரி அடுக்குகள் மற்றும் வீதங்கள்

அட்டவணை2.14 பங்குடமையின் வருமானத்திற்கான வரி அடுக்குகள் மற்றும் வீதங்கள்

அட்டவணை2.15 2020 ஆம் ஆண்டின் போது பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்

அட்டவணை 4.1 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை குறிகாட்டிகள்

அட்டவணை 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாக கொண்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் நடவடிக்கைகள்

அட்டவணை 6.1 2020.12.31 அன்று பதவியணி

அட்டவணை 6.2 2020 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

# உருக்களின் பட்டியல்


| | |
|---|---|
| உரு 2.1 | மொத்த வருமான சேகரிப்பு - 2020 |
| உரு 2.2 | 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் வருமான ஒப்பீடு |
| உரு 2.3 | அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பு |

## சுருக்கப் பதம்

| | |
|---|---|
| மு.வ.வ | முற்பண வருமான வரி |
| மு.த.வ.வ | முற்பண தனியாள் வருமான வரி |
| மா.வ.கொ.மு | மாற்று வரி கொடுப்பனவு முறைமை |
| ப.சூ.வி | பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு |
| உ.இ.ஆ.நா | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் |
| மூ.ஈ.வ. | மூலதன ஈட்டுகை வரி |
| நி.கை.உ.நி.தீ | நிருமான கைத்தொழில் உத்தரவாத நிதி தீர்வை |
| கூ.வ.வ | கூட்டிணைவு வருமான வரி |
| க.மீ.வி. | கடன் மீளக்கொடுப்பனவு விதிப்பனவு |
| பொ.சே.வ | பொருளாதார சேவைக் கட்டணம் |
| நி.ஒ. | நிதி ஒழுங்குவிதி |
| மொ.உ.உ | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| பொ.சே.வ | பொருட்கள் மற்றும் சேவைகள் வரி |
| த.தொ.தொ | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| த.வ.வ | தனிநபர்  வருமான வரி |
| உ.இ | உள்நாட்டு இறைவரி |
| ம.உ.இ.வ.ச | மலேசியா உள்நாட்டு இறைவரி சபை |
| உ.இ.தி | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் |
| வ.வ | வருமான வரி |
| பி.செ.கு | பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகள் |
| வி.நி.மு | வியாபார நிர்வாக முதுமாணி |
| வ.வி.நி.மு | வரியிடலில் வியாபார நிர்வாக முதுமாணி |
| வி.மு.க..நி | வியாபார முதுமாணி- கணக்கீடு/நிதியியல் |
| கு.வ. | குடியகல்வு வரி |
| தே.க.வ | தேச கட்டுமான வரி |
| தே.பா.அ. | தேசிய பாதுகாப்பு அறவீடு |
| பொ.கூ.அ.அ | பொருளாதார  கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி அமைப்பு |
| இ.வ.கொ.த | இணையவழி வரிக் கொடுப்பனவு தளம் |
| உ.போ.செ.வ | உழைக்கும் போதே செலுத்தும் வரி |
| ப.வ.வ. | பங்குடமை வருமான வரி |
| பொ.சே.ஆ | பொது சேவைகள் ஆணைக்குழு |
| வ.நி.மு.த.மு | வருமான நிருவாக மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை |
| மு.தீ | முத்திரை தீர்வை |
| இ.நி.அ.நி | இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம் |
| ப.கொ.வ. | பங்கு கொடுக்கல் வாங்கல் வரி |
| வஇ.அ. | வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் |
| பு.வ. | புரள்வு வரி |
| தொ.தொ.ப | தொழில்நுட்ப ,தொழிற்கல்வி மற்றும் பயிற்சி |
| பெ.சே.வ | பெறுமதி சேர் வரி |
| நி.சே.பெ.சே.வ | நிதி சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி |
| வா.உ.தீ. | வாகன உரிமத் தீர்வை |
| வீ.இ.வே | வீட்டில் இருந்து வேலைசெய்தல் |

# அத்தியாயம் 1
## நிறுவன விவரம்

## 1.1 அறிமுகம்

“உ.இ.தி – IRD” என அழைக்கப்படும் உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நாட்டிற்கு வருமானத்தை ஈட்டித்தருவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது அரசாங்கத்தின் வருமானத்தில் 50% இற்கு விஞ்சிய தொகையை சேகரிப்பதில் தன் பங்கினை வழங்குகின்றது. எவ்வாறாயினும், கோவிட் 19 பெருநோய் தொற்று காரணமாக 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வருமான சேகரிப்பில் வீழ்ச்சி ஒன்று காணப்படுகின்றது.

திரு ஹூக்ஹம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முதலாவது ஆணையாளர் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஆவார். தற்போது திரு எச். எம். டபிள்யு. சி. பண்டார அவர்கள் அந்த பதவியை வகிக்கின்றார். அவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 33 ஆவது திணைக்களத் தலைவராவார். உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது 1932 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1933 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட தீர்வை மற்றும் முத்திரைகள் என்பவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர் “வருமான வரி, பெருந்தோட்ட தீர்வை மற்றும் முத்திரைகள் திணைக்களம்” என அழைக்கப்பட்டது. இந்த திணைக்களத்திற்கு 1958 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என பெயரிடப்பட்டது. ஆரம்பத்தில் இருபத்து நான்கு உத்தியோகத்தர்களும் எழுபத்தி ஏழு எழுதுவினைஞர்களும் கடமையில் ஈடுபட்டனர். ஆனால் 2020 ஆம் ஆண்டு முடிவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 1036 உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தர்களும் 1,515 இணைந்த சேவை உத்தியோகத்தர்களும் பதவி அணியில் காணப்படுகின்றனர். திணைக்களத்தின் படிநிலை பிரகாரம் 01 ஆணையாளர் நாயகம், 09 பிரதி ஆணையாளர் நாயகங்கள், 22 சிரேஷ்ட ஆணையாளர்கள், 90 ஆணையாளர்கள் மற்றும் 1,107 சிரேஷ்ட பிரதி ஆணையாளர்கள், பிரதி ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தங்கள் கடமைகளை புரிகின்றனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது, வரி செலுத்தும் பொதுமக்களுக்கு, அர்ப்பணிப்புடன் செயற்படும் நன்றாக பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினருடன், வரிசெலுத்துநர்களுக்கு உகந்த வரி நிருவாகத்தில் சிறந்த சேவையை வழங்கும் அதன் நோக்கினை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. திணைக்களமானது, 2020 ஆம் ஆண்டில் வருமான வரி, பெறுமதி சேர் வரி, மூலதன ஈட்டுகை வரி, பங்கு பரிவர்த்தனை விதிப்பனவு, குடியகல்வு வரி, முத்திரை தீர்வை மற்றும் பந்தயம் மற்றும் சூதாட்ட விதிப்பனவு போன்ற சில வரிகளை நிருவகிக்கின்றது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ளதுடன் சில பிரிவுகள் நவம் மாவத்தை மற்றும் மெஹவெர பியச, நாரஹன்பிட்டியிலும் அமைந்துள்ளது. இந்த வருடாந்த செயலாற்றுகை அறிக்கை, 2002ம் ஆண்டு செப்டம்பர் 12ம் திகதிய 402ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்தின் 2.4ம் பந்திக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1.2 நோக்கு, செயல்நோக்கு மற்றும் உபாய இலக்குகள்

### நோக்கு

வரி செலுத்தும் பொது மக்களுக்கு மிகச் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட அர்ப்பணிப்புள்ள பதவியினைரைக் கொண்டு, வரி செலுத்துனர் நட்பு வரி நிருவாக சேவை வழங்குனராக இருத்தல்

### செயல்

வரி ஏய்ப்பு மற்றும் வரி தவிர்ப்புக்களினை தடுக்கும் அதேவேளை தன்னார்வ இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் வரி மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களின் நியதிகளுக்கு அமைவாக வரிகளைச் சேகரித்தல் மற்றும்

வரிகளையும் தொடர்புள்ள சட்டங்களையும் நியாயமாகவும் நட்புறவு மிக்கதாகவும் மற்றும் திறமையான முறையிலும் நிர்வகிப்பதன் மூலம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் முறைமையொன்றில் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்தலும் அதன் மூலமாக நன்மைபயக்கத்தக்க வரிக் கலாச்சாரம் ஒன்றினை அதிகரிக்கச் செய்தல்.

### உபாய

வரிச் சட்டங்களுடனான வரி செலுத்துநரின் சுயவிருப்பு இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதற்காக அதனை ஊக்குவிப்பதில் உதவத்தக்க நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதலும் அவ்விதமான இணக்கப்பாட்டினைக் காட்டாதவர்களைக் கண்டறிதலும் பொருத்தமானதும் உகந்ததுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்

செயற்றிறன்மிக்க வேலை நடைமுறைகள், தொழில்நுட்பம் என்பவற்றைப் பிரயோகித்து கிடைப்பனவிலுள்ள வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் செயற்றிறனை மேம்படுத்தல்.

திணைக்களத்தினால் அதனது செயல்நோக்கை நிறைவு செய்யும் முகமாக அதன் பதவியணியினர் மேலும் சிறந்த முறையில் பங்களிப்புச் செய்வதற்கு வசதியாக முகாமைத்துவம், தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வேலை அனுபவம் என்பவற்றின் மூலம் அவர்களது உற்பத்தித் திறனையும் தொழிற்துறைத் திறமையையும் உயர்த்துதல்.

## 1.3 பிரதான செயற்பாடுகள்

- உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் ஆதிக்க எல்லையின் கீழ் உள்ள அனைத்து சட்டத்தினையும் நிருவகித்தல்
- அரசாங்கத்தின் வரி வருமானத்தை சேகரித்தல்
- நிதிக் கொள்கைகளை அமுல்படுத்துவதில் பின்னூட்டல்களை வழங்குதல்

## 1.4 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- வாடிக்கையாளர் சேவை மற்றும் ஊக்குவிப்புப் பிரிவு
- பாரிய கூட்டிணைவு இணக்க மற்றும் கணக்காய்வுப் பிரிவு
- உயர் கூட்டிணைவு இணக்க மற்றும் கணக்காய்வுப் பிரிவு
- நடுத்தர கூட்டிணைவு இணக்க மற்றும் கணக்காய்வுப் பிரிவு
- கூட்டிணைவற்ற இணக்க மற்றும் கணக்காய்வுப் பிரிவு
- நகர மற்றும் பிராந்திய பிரிவுகள்
- மேன்முறையீட்டுப் பிரிவு
- மீளளிப்புப் பிரிவு
- வரித் தவறுகைப் பிரிவு
- செயலகப் பிரிவு
- வரி மூலப் பிரிவு
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் நிருவாகப் பிரிவு
- மோசடித் தடுப்புப் பிரிவு மற்றும் விசாரணைப் பிரிவு
- மனித வள மற்றும் சொத்துக்கள் நிருவாகப் பிரிவு
- கணக்குப் பிரிவு
- வருமான நிருவாக மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை(RAMIS) கருத்திட்ட பிரிவு

## 1.5 நிறுவன ஒழுங்கமைப்பு வரைபடம்

**2020.12.31 ஆம் திகதி அன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிறுவன விளக்கப்படம்**



# அத்தியாயம் 02

## முன்னேற்றமும் எதிர்கால நோக்கமும்

## 2.1 2020 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிறப்பு அடைவுகள்

### 2.1.1 இவ் வருடத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்ட வரிகள்

இவ் வருடத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட சட்டங்களின் கீழ் அமுலாக்கப்பட்ட வரிகள் அட்டவணை 2.1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1: உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் வரிகள்**

| வரி | சட்டவாக்கங்கள் |
|---|---|
| வருமான வரி | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் |
| பெறுமதிசேர் வரி (நிதி சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி அடங்கலாக) | 2003 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, 2004 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, 2006 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க , 2007 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 15 இலக்க, 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, 2013 ஆம் ஆண்டின 17 ஆம் இலக்க, 2014 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, 2015 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க 2016 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, 2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மற்றும் 2019 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் |
| பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு | 2015 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் |
| முத்திரைத் தீர்வை | 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைகள் சட்டம். |
| பங்கு கொடுக்கல்வாங்கல் தீர்வை | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதிச்சட்டம் |
| குடியகல்வு வரி | 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டம் |

மூலம்: உள்நாட்டு இறைவரி திணைக்களம்

பின்வரும் வரிகள் ஆரம்பத்தில் விதிக்கப்பட்டு தற்பொழுது அவை நீக்கப்பட்டு இருப்பினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அவற்றின் சேகரிப்பு பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது

**அட்டவணை 2.2: 2020ம் ஆண்டு வரி சேகரிக்கப்பட்ட ஆனால் நீக்கப்பட்ட மற்றும் இரத்துசெய்யப்பட்ட வரிகள்**

| வரி | தொடர்புடைய சட்டவாக்கம் |
|---|---|
| தேசிய பாதுகாப்பு தீர்வை | திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு வரிச் சட்டம் |
| பொருட்கள் சேவைகள் வரி | திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பொருட்கள், சேவைகள் வரிச் சட்டம் |
| புரள்வு வரி (வடமாகாணம்) | திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க புரள்வு வரிச் சட்டம் |
| வாகன உரிமத் தீர்வை | 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டம் |
| நிருமான கைத்தொழில் உத்தரவாத நிதி தீர்வை | திருத்தப்பட்டவாறான 2005 ஆம்ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் |
| பொருளாதார சேவைக் கட்டணம் | திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம் |

| | |
|---|---|
| தேசிய கட்டுமான வரி (NBT) | திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசிய கட்டுமான வரிச் சட்டம் |
| கடன் மீளக் கொடுப்பனவு தீர்வை (DRL) | 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம் |

மூலம்: உள்நாட்டு இறைவரி திணைக்களம்

### 2.1.2. மொத்த வருமான சேகரிப்பு

2020 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது ரூபா. 523,933,624,905 (மாகாண சபைகளுக்கு முழுமையாக மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் மாகாண சபைக்கு மாற்றப்பட்ட தேசக்கட்டுமான வரியின் கீழான வரி சேகரிப்பின் 1/3 உள்ளடங்கலாக) மொத்த வருமானமாக சேகரித்துள்ளது.

இவ் ஆண்டில் மொத்த வருமானமாக சேகரிக்கப்பட்ட ரூபா. 523,934 மில்லியனானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 501,385 மில்லியன் குறைவைக் காட்டுகின்றது. இவ் ஆண்டின் போது ஏற்பட்ட வரிக் கொள்கையில் மாற்றங்கள் மற்றும் கோவிட் 19 பெருநோய் தொற்று என்பவை வருமான சேகரிப்பு குறைவடைந்தமைக்கான பிரதான காரணங்களாகும். எவ்வாறாயினும், வருமான நிருவாக மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையினை செயல்படுத்துதல் அடங்கலாக இணக்கப்பாட்டினை வசதிப்படுத்தல் மற்றும் அமுலாக்கல் என்பவற்றில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேற்கொண்ட பரந்துபட்ட நடவடிக்கைகள் மூலமே இதனை அடைவது சாத்தியமாகியது.

இவ் வருடத்தில் அரசாங்கத்தின் வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பங்களிப்பு செய்யப்பட்ட மொத்த வருமான பங்களிப்பு வீதம் 38.30% ஆகும். ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகைகளின் கீழான வருமானத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருமான சேகரிப்பானது இத்தகைய அடைவின் 91.06% இனைக் காட்டும் அதேவேளை. ஒவ்வொரு வரி வகையின் கீழ் தேறிய வருமான மதிப்பீடுகளுடனான சேகரிப்பின் ஒத்திசைவு (மாகாண சபைகளுக்கு முழுவதுமாக மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை வரி மற்றும் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட தேசக் கட்டுமான வரியின் கீழான சேகரிப்பின் 1/3) 88.84% இனைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.3: மொத்த வருமான சேகரிப்பு - 2020**

| வரி வகை | வருமான மதிப்பீடு (ரூபா:) | வருமான சேகரிப்பு (ரூபா.) | மதிப்பீட்டில் உள்ளவாறான சேகரிப்பு % | வருமானத்தில் உள்ளவாறான சேகரிப்பு % |
|---|---|---|---|---|
| வருமான வரி | 307,000,000,000 | 252,941,572,901 | 82.39% | 48.28% |
| மூலதன ஈட்டுகை வரி | 1,000,000,000 | 357,594,125 | 35.76% | 0.07% |
| பெறுமதி சேர் வரி | 241,000,000,000 | 233,786,120,184 | 97.01% | 44.62% |
| கடன் மீளளிப்பு தீர்வை | 3,400,000,000 | 3,002,271,834 | 88.30% | 0.57% |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 2,500,000,000 | 1,428,071,291 | 57.12% | 0.27% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 1,500,000,000 | 2,347,277,681 | 156.49% | 0.45% |
| குடியகல்வு வரி | 2,000,000 | 5,853,185 | 292.66% | 0.00% |
| முத்திரைத் தீர்வை | | 11,354,837,819 | | 2.17% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 16,000,000,000 | 14,950,042,437 | 93.44% | 2.85% |
| தேச கட்டுமான வரி | 3,000,000,000 | 3,740,463,661 | 124.68% | 0.71% |
| பொருட்கள் சேவைகள் வரி | | 226,221 | | 0.00% |
| புரள்வு வரி | | 16,257,541 | | 0.00% |
| தேசிய பாதுகாப்பு தீர்வை | | 2,399,368 | | 0.00% |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | | 636,657 | | 0.00% |
| அனுப்புகைக் கட்டணம் | 1,000,000 | - | | 0.00% |
| **மொத்த இறைவரி சேகரிப்பு** | **575,403,000,000** | **523,933,624,905** | **91.06%** | **100.00%** |

*மூலம்; உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

**உரு 2.1: மொத்த வருமான சேகரிப்பு - 2020**




*மூலம்*: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**அட்டவணை 2.4: 2019 மற்றும் 2020ம் ஆண்டுகளுக்கிடையேயான வருமான ஒப்பீடு**

| வரி வகை | 2020 வருமான சேகரிப்பு ரூபா: | 2019 வருமான சேகரிப்பு ரூபா: | சேகரிப்பில் உள்ளவாறான அதிகரிப்பு/ வீழ்ச்சி% |
|---|---|---|---|
| வருமான வரி | 252,941,572,901 | 371,795,681,316 | -31.97% |
| மூலதன ஈட்டுகை வரி | 357,594,125 | 602,439,115 | -40.64% |
| பெறுமதி சேர் வரி | 233,786,120,184 | 443,877,131,612 | -47.33% |
| கடன் மீளக்கொடுப்பனவு விதிப்பனவு | 3,002,271,834 | 28,673,572,980 | -89.53% |
| பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு | 1,428,071,291 | 2,435,982,807 | -41.38% |
| பங்கு கொடுக்கல்வாங்கல்கள் வரி | 2,347,277,681 | 1,023,443,599 | 129.35% |
| குடியகல்வு வரி | 5,853,185 | 5,008,044 | 16.88% |
| முத்திரைத் தீர்வை | 11,354,837,819 | 14,863,016,823 | -23.60% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 14,950,042,437 | 55,301,397,165 | -72.97% |
| தேசக் கட்டுமான வரி | 3,740,463,661 | 105,185,802,597 | -96.44% |
| பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 226,221 | 17,036,964 | -98.67% |
| புரள்வு வரி | 16,257,541 | 29,626,965 | -45.13% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 2,399,368 | 9,045,921 | -73.48% |
| நிருமான கைத்தொழில் உத்தரவாத நிதி தீர்வை | 636,657 | 1,219,286 | -47.78% |
| வாகன உரிமத் தீர்வை | - | 1,498,601,586 | -100.00% |
| அனுப்புகை கட்டணம் | - | - | |
| **மொத்த வருமான சேகரிப்பு** | **523,933,624,905** | **1,025,319,006,780** | **-48.90%** |

*லம்: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

உரு 2.2: 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் வருமான ஒப்பீடு




*மூலம்: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

### 2.1.3 அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பு

**அட்டவணை 2.5அரசாங்க வருமானம் மற்றும் 2020 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) என்பவற்றுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பு மற்றும் கடந்த நான்கு வருடத்தின் அதன் போக்கு என்பவற்றைக் காட்டுகின்றது. இதனை உரு 2.3 விளக்குகின்றது. 2019 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் ரூபா.** 1,367,960 **மில்லியன் என்பதுடன் இது அரசாங்கத்திற்கான மொத்த வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித்த திணைக்களத்தினால்** 38.30**% பங்களிப்பினை கொண்டுள்ளது.**

**2020 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான சேகரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (மொ.உ.உ**3.50**% ஆகும்.**

**அட்டவணை 2.5: அரச வருமானம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பு (தற்போதைய விலைகளில்)**

| வருடம் | அரச வருமானம் (ரூபா. மில்.*) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சேகரிப்பு (ரூபா. மில்*) | அரச வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்கத்தின் சேகரிப்பு % | மொ.உ.உ முக்கியமான பொருளாதார நடவடிக்கை (தற்போதைய விலைகளில்) (ரூபா மில்) | மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (மொ.உ.உ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சேகரிப்பு % |
|---|---|---|---|---|---|
| 2016 | 1,686,062 | 641,547 | 38.05% | 11,996,083 | 5.35% |
| 2017 | 1,831,531 | 836,518 | 45.67% | 13,328,103 | 6.28% |
| 2018 | 1,919,973 | 900,348 | 46.89% | 14,290,907 | 6.30% |
| 2019 | 1,890,899 | 1,025,319 | 54.22% | 15,012,953 | 6.83% |
| 2020 | 1,367,960 | 523,934 | 38.30% | 14,972,995 | 3.50% |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

**உரு 2.3: அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பு**




*மூலம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*

### 2.1.4 முத்திரைத் தீர்வை, தேசக்கட்டுமான வரி என்பவற்றின் வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல்

2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட உரிய சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் பின்வரும் வரிகளிலிருந்தான வருமான சேகரிப்பில் கீழ்வரும் வீதங்கள் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தேசக்கட்டுமான வரி | மொத்த சேகரிப்பில் 33.33% |
| முத்திரைத் தீர்வை | மொத்த சேகரிப்பில் 100% |

அட்டவணை 2.6 ஆனது மொத்த சேகரிப்பு மற்றும் உரிய வரிகளின் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வரி வருமான தொகை என்பனவற்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.6: வரி வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் - 2020**

| | மொத்த சேகரிப்பு (ரூபா.) | மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட தொகை (Rs.) | % |
|---|---|---|---|
| தேசக்கட்டுமான வரி | 3,740,463,661 | 1,389,286,496 | 33.33% |
| முத்திரைத் தீர்வை | 11,354,837,819 | 11,354,837,819 | 100% |

மூலம்: உள்நாட்டு இறைவரி திணைக்களம்

### 2.1.5 வரிசெலுத்துநர் பதிவு விவரம்

**2020 ஆம் ஆண்டு முடிவின் போது வெவ்வேறு வரி தேவைப்பாடுகளுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பதிவு செய்துள்ள நபர்களின் எண்ணிக்கையை அட்டவணை 2.7 காட்டுகின்றது.**

**அட்டவணை 2.7:ஆம் திகதியில் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட வரி 31.12.2020 செலுத்துனர்களின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| வருமான வரி | | |
| ***கூட்டிணைவு*** | | |
| வதிவுள்ள கம்பனிகள்/வதிவற்ற கம்பனிகள் | 60,721 | |
| ***கூட்டிணைவில்லா*** | | |
| தனிநபர்கள் | 292,712 | |
| பங்குடமையாளர்கள் | 16,949 | |
| ஆட்களின் குழுமங்கள் | 804 | |
| உழைக்கும் பொழுது செலுத்தும் வரி (உ.பொ.செ.வ) திட்டத்தின் கீழ்/முற்பண தனியாள் வருமான வரி செலுத்தும் ஊழியர்கள் | 664,828 | |
| **மொத்த வருமான வரி செலுத்துநர்கள்** | | **1,036,014** |
| **ஏனைய வரி செலுத்துநர்கள்** | | |
| பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்த ஆட்கள் | 8,152 | |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 239 | |
| பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீட்டு வரிசெலுத்துநர்களுக்காக பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 637 | |
| சூதாட்ட அறவீட்டு வரிசெலுத்துநர்களுக்காக பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | | |
| **மொத்த ஏனைய வரிசெலுத்துநர்கள்** | | **9,028** |
| உழைக்கும் போதே செலுத்தும் வரி/முற்பண தனிநபர் வருமான வரித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில்தருநர்கள் | 34,991 | |
| வட்டி மீதான பிடித்துவைத்தல் வரி/முற்பண வருமான வரிக்காக பதிவு செய்த பிடித்துவைக்கும்/முற்பண வருமான வரி முகவர்கள் | 615 | |
| விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீதான பிடித்துவைத்தல் வரி/முற்பண வருமான வரி (முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 43,188 | |
| முத்திரைத் தீர்வை (முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 9,609 | |
| | | **88,403** |
| **2020.12.31 இலுள்ளவாறு பதிவுசெய்துள்ள வரிசெலுத்துநர்களின் மொத்த எண்ணிக்கை** | | **1,133,445** |

**மூலம்: உள்நாட்டு இறைவரி திணைக்களம்**

### 2.1.6 உற்பத்தித் திறன் விகிதம்

**2020 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மொத்த செலவினங்கள் ரூபா** 4,489.72 **மில்லியனாக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா** 523,933.62 **மில்லியனாக காணப்பட்டது. ஆகவே, உற்பத்தித் திறன் விகிதம் (அதாவது செலவினத்தின் ஒவ்வொரு ரூபாவுக்குமான சேகரிக்கப்பட்ட வருமானம்)** 117:1. **அதாவது, ரூபா 100/- சேகரிப்பதற்கான செலவு 86 சதங்களாகும். இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரி, தேச கட்டுமான வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணம் தவிர்த்து ரூபா 100/- இனை சேகரிப்பதற்க்கான செலவு ரூபா 1.03 ஆக காணப்பட்டது. (2019 ஆம் ஆண்டில் அதை ஒத்த தொகைகள் 44 சதங்கள் மற்றும் 54 சதங்களாக காணப்பட்டது). அட்டவணை 2.8 ஆனது 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான வருமான சேகரிப்பு, மொத்த செலவினங்கள் மற்றும் சேகரிப்புச் செலவு என்பவற்றை வழங்குகின்றது.**

**அட்டவணை 2.8: வருமான சேகரிப்பு, மொத்த செலவினம் மற்றும் சேகரிப்பு செலவினம் (ரூபா. மில்லியன்கள்)**

| விவரணம் | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| **வருமான சேகரிப்பு** | | | |
| வருமான வரி | 257,366.66 | 371,795.68 | 252,941.57 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 104.14 | 602.44 | 357.59 |
| பெறுமதிசேர் வரி | 461,650.62 | 443,877.13 | 233,786.12 |
| கடன் மீளக்கொடுப்பனவு விதிப்பனவு | 4,501.17 | 28,673.57 | 3,002.27 |
| பந்தயம் மற்றும் சூதாட்ட விதிப்பனவு | 2,469.58 | 2,435.98 | 1,428.07 |
| பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு | 1,196.35 | 1,023.44 | 2,347.28 |
| குடியகல்வு வரி | 16.68 | 5.01 | 5.85 |
| முத்திரைத் தீர்வை | 12,026.43 | 14,863.02 | 11,354.84 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 52,978.51 | 55,301.40 | 14,950.04 |
| தேசக் கட்டுமான வரி | 105,690.53 | 105,185.80 | 3,740.46 |
| பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி | - | 17.04 | 0.23 |
| புரள்வு வரி | 88.93 | 29.63 | 16.26 |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 40.99 | 9.05 | 2.40 |
| நிருமான கைத்தொழில் உத்தரவாத நிதி தீர்வை | 26.20 | 1.22 | 0.64 |
| வாகன உரித்து அறவீடு | 2,191.68 | 1,498.60 | - |
| அனுப்புகை வரி | - | - | - |
| **மொத்த சேகரிப்பு** | **900,348.47** | **1,025,319.01** | **523,933.62** |
| **செலவினங்கள்** | | | |
| **மீண்டுவரும் செலவினங்கள்** | | | 2,736.63 |
| வேதனாதிகள் | 2,433.27 | 2,712.91 | 2,736.63 |
| பயணச் செலவுகள் | 37.82 | 22.55 | 7.09 |
| வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள் | 116.24 | 170.84 | 121.00 |
| பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புக்கள் | 72.65 | 142.41 | 158.78 |
| ஒப்பந்த சேவைகள் | 737.22 | 720.17 | 593.20 |
| மாற்றல்கள் | 42.96 | 43.85 | 44.76 |
| ஏனையவை (இழப்புக்கள் மற்றும் பதிவழிக்கப்பட்டவை) | - | - | 0.22 |
| **மூலதன செலவினங்கள்** | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 52.67 | 114.85 | 139.77 |
| சுவீகாரங்கள் | 38.9 | 144.55 | 65.01 |
| திறன் கட்டியெழுப்புதல் | 180.92 | 42.80 | 19.74 |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | 288.84 | 364.27 | 227.60 |
| முதலீடு (புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம்) | 132.81 | 55.93 | 375.92 |
| **மொத்த செலவினம்** | **4,134.30** | **4,535.13** | **4,489.72** |
| **100/- சேகரிப்பிற்கான செலவு** | **0.46** | **0.44** | **0.86** |
| **பெறுமதிசேர் வரி, தேச கட்டுமான வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணம் நீங்கலாக 100/- சேகரிப்பதற்கான செலவு** | **0.58** | **0.54** | **1.03** |

மூலம்: உள்நாட்டு இறைவரி திணைக்களம்

### 2.1.7 வரி செலுத்தும் பொதுமக்கள் மற்றும் வரி தொழிவல்லுநர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது 2020 இல் வரிசெலுத்துநர்களுக்கும் வரி தொழில்வல்லுநர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்திருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் முக்கியமாக வரிச் சட்டம் மற்றும் இலத்திரனியலுடனான கோவைப்படுத்தல் பற்றிய அறிவை வழங்குவதை மையப்படுத்தியதாக காணப்பட்டது.

**அட்டவணை 2.9: 2020 ஆம் ஆண்டில் பொதுமக்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

| | விடயம் | நிறுவனம்/பார்வையாளர்கள் | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மு.த.வ.வ (APIT) (முற்பண தனிநபர் வருமான வரி) | அனைத்து பங்குதாரர்களும் (வரிசெலுத்துநர்கள்/ ஆலோசகர்கள் போன்றோர் ) | 500* |
| 2 | உ..போ.செ.வ (PAYE) (உழைக்கும் போதே செலுத்தும் வரி) | அனைத்து பங்குதாரர்களும் (வரிசெலுத்துநர்கள்/ ஆலோசகர்கள் போன்றோர்) | 500* |
| 3 | கூ.வ.வ. (CIT) (கூட்டிணைவு வருமான வரி) | அனைத்து பங்குதாரர்களும் (வரிசெலுத்துநர்கள்/ ஆலோசகர்கள் போன்றோர்) | 1200 இற்கு மேற்பட்ட பார்வைகள் |
| 4 | த.வ.வ (IIT) (தனிநபர் வருமான வரி) | அனைத்து பங்குதாரர்களும் (வரிசெலுத்துநர்கள்/ ஆலோசகர்கள் போன்றோர்) | 6700 இற்கு மேற்பட்ட பார்வைகள் |
| 5 | ப.வ.வ. (PIT)( பங்குடமை வருமான வரி) | அனைத்து பங்குதாரர்களும் (வரிசெலுத்துநர்கள்/ ஆலோசகர்கள் போன்றோர்) | 1200 இற்கு மேற்பட்ட பார்வைகள் |
| 6 | கூ.வ.வ. (CIT) (கூட்டிணைவு வருமான வரி) | அனைத்து பங்குதாரர்களும் (வரிசெலுத்துநர்கள்/ ஆலோசகர்கள் போன்றோர்) | 575 இற்கு மேற்பட்ட பார்வைகள் |
| 7 | இ-கோப்பிடல்-த.வ.வ. (தனிநபர் வருமான வரி ) | அனைத்து பங்குதாரர்களும் (வரிசெலுத்துநர்கள்/ ஆலோசகர்கள் போன்றோர்) | 900 இற்கு மேற்பட்ட பார்வைகள் |
| 8 | இ-கோப்பிடல்-ப.வ.வ. (பங்குடமை வருமான வரி ) | அனைத்து பங்குதாரர்களும் (வரிசெலுத்துநர்கள்/ ஆலோசகர்கள் போன்றோர்) | 200 இற்கு மேற்பட்ட பார்வைகள் |

**அண்ணளவான எண்ணிக்கை*

*மூலம்*: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

### 2.1.8 விபரத்திரட்டு இணக்கம்

**இந்த வருடத்திலும் வரி விபரத்திரட்டுக்களை உரிய நேரத்தில் கோப்பிட மற்றும் சுய மதிப்பீட்டில் வரிகளை செலுத்த வரிசெலுத்துநர்களை ஊக்குவிக்க நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.**

**அட்டவணை 2.10: 2015/2016 - 2019/2020 வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு**

| வரி மதிப்பீட்டாண்டு | துறை | உரிய நேரத்திற்கான இணக்கப்பாடு | உரிய திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் ளான இணக்கப்பாடு | 2021.02.28 அன்று உள்ளவாறான இணக்கப்பாடு |
|---|---|---|---|---|
| 2015/2016 | கூட்டிணைவு | 30% | 46% | |
| | கூட்டிணைவற்ற | 48% | 59% | |
| 2016/2017 | கூட்டிணைவு | 41% | 45% | |
| | கூட்டிணைவற்ற | 45% | 56% | |
| 2017/2018 | கூட்டிணைவு | 47% | 51% | |
| | கூட்டிணைவற்ற | 31% | 38% | |
| 2018/2019 | கூட்டிணைவு | 47% | 50% | |
| | கூட்டிணைவற்ற | 32% | 38% | |
| 2019/2020 | கூட்டிணைவு | 6% | 8% | 46% |
| | கூட்டிணைவற்ற | 3% | 6% | 30% |

*மூலம்*: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**அட்டவணை 2.11 பெறுமதி சேர் வரி மீதான விபரத்திரட்டு இணக்கப்பாடு**

| வருடம் | இணக்கப்பாடு |
|---|---|
| 2018 ஆம் ஆண்டு | 31% |
| 2019 ஆம் ஆண்டு | 47% |
| 2020 ஆம் ஆண்டு | 36% |

*மூலம்*: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

கோவிட் 19 பெருநோய் தொற்று நிலவரம் காரணமாக உரிய நேரத்தில் கூ.வ.வ., த.வ.வ மற்றும் ப.வ.வ என்பவற்றின் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்கும் இணக்கப்பாடு குறிப்பிட்டளவு வீழ்ச்சியை காட்டியதனால், கூ.வ.வ, த.வ.வ மற்றும் ப.வ.வ என்பவற்றுக்கான விபரத்திரட்டுக்களை சமர்ப்பிப்பதற்கான திகதிகள் 2021, பெப்ரவரி 28 வரை நீடிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கூட்டிணைவு மற்றும் கூட்டிணைவற்ற துறைகளில் முறையே 46% மற்றும் 30% இணக்கப்பாட்டையே காட்டின.

### 2.1.9 2020 ஆம் ஆண்டில் வருமான வரி தொடர்பிலான பிரதான கொள்கை மாற்றங்கள்

1. 2020, ஏப்பிரல் 1 ஆம் திகதி செயல்வலுப்பெறும் வகையில் பிடித்துவைத்தல் வரி (பங்கிலாபம், வட்டி, கழிவு, கட்டணம், இயற்கை வள கொடுப்பனவு, வாடகை, உரிமைப் பணம், கட்டுப்பணம் அல்லது அவை போன்ற குறிப்பிட்ட கால இடைவெளியிலான கொடுப்பனவுகள்) மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரி (உ..போ.செ.வ) என்பவற்றின் நீக்கம் மற்றும் முற்பண வருமான வரி (மு. வ. வ) மற்றும் முற்பண தனிப்பட்ட வருமான வரி (மு.த.வ.வ) என்பவற்றின் சேர்க்கை

2. 2020, சனவரி 1 அன்று அல்லது அதற்கு பின்னர், வதிவுள்ள மற்றும் வதிவற்ற தனிநபர்களுக்கு அதிகரிக்கப்பட்ட வரி அடுக்குகள் மற்றும் வரி வீதங்கள் பின்வருமாறு;

**அட்டவணை 2.12 வரி அடுக்குகள் மற்றும் வீதங்கள்**

| வரி மதிப்பீட்டாண்டிற்கான வரியிடற்பாலதான வருமானம் | செலுத்தப்படற்பாலதான வரி (%) |
|---|---|
| முதல் 3,000,000 ரூபா | 6% |
| அடுத்த 3,000,000 ரூபா | 12% |
| மிகுதி | 18% |

*மூலம்*: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

3. 2020 சனவரி 1 அன்று அல்லது அதன் பின்னர், முடிவுறுத்தல் நன்மைகளின் (திரட்டிய ஒய்வூதியம், இளைப்பாற்றுகை பணிக்கொடை, பதவி அல்லது ஊழிய இழப்புக்கான நட்ட ஈடு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இருந்து பெறப்பட்ட தொகை) வரி அடுக்குகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பிரயோகிக்கத்தக்க வரி வீதங்கள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன:

**அட்டவணை 2.13 முடிவுறுத்தல் நன்மைகளிற்கான வரி அடுக்குகள் மற்றும் வீதங்கள்**

| மொத்த முடிவுறுத்தல் நன்மைகள் | செலுத்தப்படற்பாலதான வரி (%) |
|---|---|
| முதல் 10,000,000 ரூபா | 0% |
| அடுத்த 10,000,000 ரூபா | 6% |
| மிகுதி | 12% |

*மூலம்*: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

4. 2020 சனவரி அன்று அல்லது அதற்கு பின்னர், பங்குடமையின் வரியிடற்பாலதான வருமானம் பின்வரும் வீதங்களில் வரியிடற்படுகின்றது.

**அட்டவணை 2.14 பங்குடமையின் வருமானத்திற்கான வரி அடுக்குகள் மற்றும் வீதங்கள்**

| வரி மதிப்பீட்டாண்டிற்கான வரியிடற்பாலதான வருமானம் | வரியிடற்பாலதான வருமானம் (%) |
|---|---|
| முதல் 1,000,000 ரூபா | 0% |
| மிகுதி | 6% |

*மூலம்*: உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

5. 2020 சனவரி 1 செயல்வலுப்பெறும் வகையில், வரி மதிப்பீட்டாண்டு ஒன்றிற்கு, ஒரு கம்பனியின் ஈட்டுகை மற்றும் இலாபங்களின் பகுதிகள் பின்வரும் வீதங்களில் வரியிடப்படுதல் வேண்டும்.

(அ) பந்தயம் மற்றும் சூதாட்டம், மதுபானம் மற்றும் புகையிலையைக் கொண்ட வியாபாரம் ஒன்றிலிருந்தான வருமானம் மற்றும் இலாபங்கள் வேறொரு வியாபரத்தின் வெறுமனே இடைநேர்விளைவானதாகவுள்ள அத்தகைய வருமானம் மற்றும் இலாபம் நீங்கலான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 14%;

(ஆ) வெளிநாட்டு நாணயத்தில் பொருட்கள் அல்லது வணிக சரக்குகளின் விற்பனைக்கான கொடுப்பனவுகள் பெறப்படுவதும் அதனை இலங்கைக்கு வங்கி ஒன்றின் ஊடாக அனுப்பிவைக்கப்படுவதுமான, அத்தகைய விற்பனை வியாபாரத்தை நடாத்துவதிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் -14%

(இ) குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியின் ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் – 14%

(ஈ) கல்விச் சேவைகளை வழங்குவதிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 14%

(உ) சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பொறுப்பு முயற்சியொன்றின் ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 14%

(ஊ) நிருமான சேவைகளை வழங்குவதிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 14%

(எ) கமத்தொழிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 14%

(ஏ) சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குவதிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 14%;

(ஐ) வதிவுள்ள கம்பனியில் இருந்து பெறப்பட்ட பங்கிலாபங்களிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 14%

(ஒ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபை இலங்கைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்துள்ள, சுகாதார அமைச்சு, சுகாதார சேவைகள் திணைக்களம், இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை காவற்துறை மற்றும் கோவிட் நிலையம் என்பவற்றுக்கு சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அதனுடன் ஒத்த பொருட்களை விநியோகிக்கும் ஏதேனும் ஏற்றுமதி கம்பனியால் பெறப்பட்ட ஈட்டுகை மற்றும் இலாபங்கள் – 14%

(ஓ) 2022 ஏப்பிரல் 1 ஆம் திகதி ஆரம்பித்து மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளுக்கு (2022/2023 முதல் 2024/2025 வரை) இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் அனுமதிபத்திரம் வழங்கப்பட்ட கொழும்பு பங்குபரிவர்த்தனையில் 2021 சனவரி 1 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு பின்னரோ, ஆனால் 2021 திசம்பர் 31 இற்கு முன்னர் தங்கள் பங்குகளை நிரலிட்டுள்ள எந்தவொரு கம்பனியினதும் ஈட்டங்கள் அல்லது இலாபங்கள் (முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டங்கள் தவிர்த்து) – 14%

(ஔ) இந்த உப பந்தியின் (அ), (ஆ), (இ), (ஒ) மற்றும் (ஓ) விடயங்களுக்கு உட்பட்டு உற்பத்தியிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 18%

(க) பந்தயம் மற்றும் சூதாட்டத்தை நடாத்துவதிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 40%

(கா) ஏதேனும் மதுபானம் அல்லது புகையிலையின் உற்பத்தி மற்றும் விற்பனை அல்லது இறக்குமதி மற்றும் விற்பனையிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 40%

6 வரி விலக்களிப்புகள்

(அ) இலங்கை மத்திய வங்கியின் அனுமதியுடன் எந்தவொரு வர்த்தக வங்கி அல்லது சிறப்பு வங்கியில் எந்தவொரு நபரினால் அல்லது அவர் சார்பில் திறக்கப்பட்ட எந்தவொரு வெளிநாட்டு நாணய கணக்கிலும் வெளிநாட்டு நாணயத்தில் வைப்பிலிடப்பட்ட பணத்தில் 2020 சனவரி 1 அன்று அல்லது அதற்கு பின்னர், அவருக்கு திரட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட வட்டி

(ஆ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 29 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் வழங்கப்பட்ட ஏற்புடைய ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு, இலங்கையில் அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகத்துடன் திறக்கப்பட்டு பராமரிக்கப்படும் “சிறப்பு வைப்பு கணக்கு” என தலைப்பிடப்பட்ட கால வைப்பு கணக்கிலிருந்து, 2020, ஏப்பிரல் 08 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு பின்னரோ அக்கணக்கிற்கு திரட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட வட்டி.

(இ) இன்னொரு வதிவுள்ள கம்பனியிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்களில் இருந்து வதிவுள்ள கம்பனி ஒன்றினால் பங்கிலாபங்கள் செலுத்தப்பட்டிருப்பின், 2020 சனவரி 1 அன்று அல்லது அதற்கு பின்னர் ஓர் வதிவுள்ள கம்பனியிலிருந்து பெறப்பட்ட அத்தகைய பங்கிலாபங்கள்;

(i) வதிவற்ற நபராகிய ஒரு உறுப்பினர் ஒருவருக்கு;

(ii) 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி IV இன் ஏற்பாடுகளுக்கு இணங்க பின்வரும் வியாபாரத்தில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதில் ஈடுபட்டுள்ளதும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபை இலங்கைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்ட தும்: -

(iiஅ) இறக்குமதி, சிறியளவிலான பதனிடுகை மற்றும் மீள் ஏற்றுமதியை உட்படுத்துகின்ற களஞ்சிய வர்த்தகம்;

(iiஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறுகை செய்யப்படக் கூடியவிடத்து அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றை இலங்கையினுள் கொண்டுவராமல் வேறொரு நாட்டுக்குக் கப்பலேற்றப்படக் கூடியவிடத்து கரைகடந்த வியாபாரம்;

(iiஇ) வெளிநாடுகளிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு முன்னிறுதிச் சேவைகளை வழங்குதல்;

(iiஈ) நிதிசார் வழங்கல் தொடரையும் சிட்டையிடும் தொழிற்பாடுகளையும் முகாமை செய்வதற்கான முன்னிலை வாங்குநர்களின் தலைமையலுவலக தொழிற்பாடுகள்;

(iiஉ) இலங்கையில் பிணிக்கப்பட்ட குதம் அல்லது பலநாட்டுத் திரட்டுகை போன்ற தகவுப் பொருத்தமான சேவைகள்.

(ஈ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் குறித்துரைக்கப்பட்டவாறான அதனை இயலச் செய்யும் சேவைகளை வழங்கும் எவரேனும் நபரினால் 2020, சனவரி 1 ஆம் திகதி அன்றோ அதன் பின்னரோ ஈட்டப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள்.

(உ) வெளிநாட்டு நாணயத்தில் பின்வரும் சேவைக்கு பெறப்பட்டதும் இலங்கைக்கு வங்கி ஒன்றினூடாக அனுப்பிவைக்கப்பட்டதுமான இலங்கைக்கு வெளியே உள்ள எவரேனும் ஓர் ஆளுக்கு எவரேனும் ஆள் ஒருவரினால் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் ஏதேனும் சேவையை வழங்கியதில் 2020 சனவரி 1 அன்று அல்லது அதற்கு பின்னர் ஈட்டப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஈட்டுகைகள் அல்லது இலாபங்கள்

(ஊ) வெளிநாட்டு நாணயத்தில் பின்வரும் சேவைக்கு பெறப்பட்டதும் இலங்கைக்கு வங்கி ஒன்றினூடாக அனுப்பிவைக்கப்பட்டதுமான [உப பந்தி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஈட்டங்கள் மற்றும் இலாபங்கள் தவிர்ந்த] ஏதேனும் வெளிநாட்டு மூலத்தில் இருந்து எவரேனும் ஆள் ஒருவர் 2020 சனவரி 1 அன்று அல்லது அதற்கு பின்னர் ஈட்டப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட ஈட்டங்கள் அல்லது இலாபங்கள்

(எ) 2021.04.01 அம் திகதியில் அல்லது அதற்கு பின்னர் தொ.வா.ப (தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி மற்றும் பயிற்சி) கருத்தின் கீழ் நியமப்படுத்தப்பட்டதும் மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான வாழ்க்கைத் தொழில் கல்வி நிறுவனம் ஒன்றினால் ஈட்டப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஈட்டங்கள் அல்லது இலாபங்கள்.

(அ) ஒரு வரி மதிப்பீட்டாண்டில் அதற்கு உடன் முன்னைய வரிமதிப்பீட்டாண்டின் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை போன்று இரு மடங்கு எண்ணிக்கையாக அவ் வரி மதிப்பீட்டாண்டில் அந்த நிறுவனம் அதிகரித்திருப்பின்; மற்றும் அடுத்த நான்கு வருடங்களுக்கு முதலாம் ஆண்டின் மாணவர் உள்ளீட்டை அவ்வாறே பேணுவதுமாக இருப்பின் அந்த வருடங்களில் அந்த தேவைப்பாடுகளை பூர்த்தி செய்த நிறுவனமாக கருதப்படும்.

(ஏ)

(i) ஆய்வுகூட சேவைகள் அல்லது அத்தாட்சிபடுத்தும் சேவைகளில் இருந்து எந்தவொரு வதிவற்ற ஆள் ஒருவர்;

(ii) சமய அலுவல்களுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சுடன் பதிவு செய்துள்ள எந்தவொரு சமய நிறுவனத்திற்கும், மானியங்கள் அல்லது நன்கொடை ஊடாக

2020,சனவரி 1 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை

7. தகைமையளிக்கும் நிவாரணங்கள்

(அ) 2020, சனவரி அன்று அல்லது அதற்கு பின்னர் இலங்கையில் வதிவுள்ள அல்லது பிரசை ஒருவருக்கு தனிப்பட்ட நிவாரணம் ரூபா 500,000 இலிருந்து ரூபா 3,000,000 இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வதிவுள்ள ஆளொருவர், 2020, சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் வரி மதிப்பீட்டாண்டு ஒன்றுக்கு பின்வரும் செலவினங்களில் மொத்தமாக ரூபா 1,200,000 ஐ கோரலாம்: -

(i) மருத்துவ காப்புறுதி அடங்கலாக சுகாதார செலவினங்கள்;

(ii) அத்தகைய தனியாளிற்கு அல்லது அத்தகைய ஆளின் பிள்ளைகளுக்கு உள்ளூரில் ஏற்பட்ட கல்விக்கான செலவினம்.;

(iii) வீட்டு கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி;

(iv) அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கு மேற்கொள்ளப்படும் பங்களிப்புகள்;

(v) கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் நிரலிடப்பட்ட மற்றும் இலங்கை பிணைமுறி பங்குபரிவர்த்தனையில் உரிமம் அளிக்கப்பட்ட பங்குகள் அல்லது ஏனைய நிதிசார் சாதனம் அல்லது பங்குகள் மற்றும் பிணைமுறி கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 420) கீழ் திறைசேரி முறி அல்லது உள்ளூர் திறைசேரி உண்டியல் சட்டத்தின் (அத்தியாயம் 417) கீழ் திறைசேரி உண்டியலை கொள்வனவு செய்வதில் உறப்பட்ட செலவினம்.

8. ஏனைய நிவாரணங்கள்

(அ) ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் எந்தவொரு வரிச் சட்டத்திற்கும் பங்கம் ஏற்படாதவாறு, பின்வரும் எந்தவொரு நபருக்கும், ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் எந்தவொரு வரிச் சட்டத்தின் கீழ் உள்ள மதிப்பீடும் மேற்கொள்ளப்படல் அல்லது எந்தவொரு தண்டத்தையும் அமுல்படுத்தல் அல்லது தண்ட ஏற்பாடுகளில் எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் ஆகாது

(i) அத்தகைய சட்டவாக்கங்கங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஆணையாளர்யகத்திற்கு அத்தகைய நபரின் வெளிப்படுத்தப்படாத மூலங்களிலிருந்து ஈட்டிய பணம் அல்லது உரிய வரிகள் செலுத்தாதவிடத்து; மற்றும்

(ii) 2021 சனவரி 1 முதல், 2021 திசம்பர் 31 வரையான காலப்பகுதியில் இலங்கையில் ஏதேனும் பொறுப்பேற்பில் முதலீடாக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் மறைத்து வைத்திருந்த அத்தகைய பணத்தை பயன்படுத்தின்; ஆனால்

(iii) மொத்த முதலீட்டுத் தொகையில் ஆணையாளர் நாயகத்திற்கு இறுதி வருவாயில் ஒரு வீதத்தை கொடுப்பனவு செய்வதற்கு உட்பட்டு

9. கோவிட் – 19 இற்கு பிந்திய பொருளாதார மீட்சியை இயலசெய்வதற்கான வரி நிவாரணங்கள்

1. ஆணையாளர் நாயகத்தின் பதிவுகளில் 2020, ஜூன் 26 வரையில் நிலுவையாகவுள்ள 2019, மார்ச் 31 முடிவடையும் வரி மதிப்பீட்டாண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் மதிப்பீடுகளில் அத்தகைய நிலுவை எழுமாயின் (விபரத் திரட்டுகள் பிரகாரம் வரி கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடு தவிர்ந்தவை) ஏதேனும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரி நிலுவைகளை ஆணையாளர் நாயகம் பதிவழித்தல் வேண்டும். -

(அ) அத்தகைய மதிப்பீடு இந்த சட்டத்தின் அல்லது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டிருப்பின்; மற்றும்

2. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் வருமான வெளிப்படுத்தல் அல்லது ஏதேனும் கழிப்பனவுகள் அல்லது நிவாரணங்களில் மோசடி அல்லது வேண்டும் என்றே புறக்கணிப்பு செய்யவில்லை என்றும் விபரத்திரட்டில் வெளிப்படுத்தப்பட்ட வரி செலுத்தப்பட்டுள்ளது

என்றும் உதவி ஆணையாளர் திருப்தி அடையும் பட்சத்தில், 2019/2020 ஆம் வரி மதிப்பீட்டாண்டிற்கு மதிப்பீடு வழங்கப்படமாட்டாது.

3. எந்தவொரு சிறிய அல்லது நடுத்தர தொழில் முயற்சியினால் 2020, ஜூன் 26 அன்று நிலுவையிலுள்ளதும் செலுத்தப்படப்பாலதுமான தவறுகையிலுள்ள வரி அல்லது நிலுவைத் தொகையை செலுத்தி தீர்ப்பதற்கு ஆணையாளர் நாயகம் சலுகைக் காலத்தை வழங்குவார்.

4. 2020, மார்ச் 1 முதல் 2020 ஜூன் 30 வரையிலான காலப்பகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் ஏதேனும் வரிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, விபரத்திரட்டினை அல்லது ஏதேனும் கூற்றுக்களை கோப்பிடாத நபர் ஒருவருக்கு அதனை 2020, திசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருப்பின் உரிய நேரத்தில் செய்யப்பட்டதாக கருதப்படும்.

### 2.1.10 2020 ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி தொடர்பில் பிரதான கொள்கை மாற்றங்கள்

1. 2020.01.01 செயல்வலுப் பெறும் வகையில் பெறுமதி சேர் வரிக்கான பதிவு எல்லை காலாண்டுக்கு 3 மில்லியன் அல்லது வருடாந்தம் 12 மில்லியனிலிருந்து காலாண்டுக்கு 75 மில்லியன் அல்லது வருடாந்தம் 300 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2. 2020.01.01 செயல்வலுப் பெறும் வகையில் பதிவு எல்லைக்குள் காணப்படாவிடினும், வரியிடற்பாலதான நடவடிக்கையை மேற்கொள்ளும் ஆளொருவரின் எழுத்துமூல கோரிக்கையின் மீது பெறுமதி சேர் வரிக்கான தன்னார்வ பதிவுக்கு அனுமதி வழங்கல்

